நல்லூ

விலை ரூபா 1-25

நல்லூர் கிளை நூலகம்

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 15 ஷஃபா 18 இதழ் 76

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-4-1986

## கந்தளாய் அகதிகள்: ஒருபகுதியினர் புறக்கணிப்பு

[திருகோணமலையிலிருந்து நமதுநிருபர்]

கந்தளாய்க்குளம் உடைப்பெடுத்ததால் பாதிக்கப்பட்டு அகதிகளான குடும்பங்களிலி பிள்ளையார் கோவில்பகுதியிலிருந்த 68 குடும்பங்களைச் சேர்ந்த 318 பேர் அநாதரவான நிலையிலுள்ளனர்.

கடந்த 20ம் திகதிகாலை இக்குளம் உடைப்பெடுத்ததைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மற்றும் 1200 குடும்பங்களுக்கு 7 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு வசதிகள் அளிக்கப்பட்டுள்ள போதிலும் பிள்ளையார் கோவில்பகுதியில் வாழ்ந்துவந்த மக்களுக்கு எவ்வித வசதியும் செய்துகொடுக்கப்படவில்லை.

இன்றுதொடக்கம் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் முன்னேற்றச் சங்கமும் அநாதரவுக்குள்ளாகியுள்ள அகதிகளுக்கான நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இந்து ஆலயங்களின் முகாமையாளர்கள் அனைவரும் ஆலயங்களின் செலவினங்களைக் காலத்துக்கேற்ப சுருக்கிக் கந்தளாய் அகதிகளுக்கு உதவும்படியும், காசோலைகளையோ காசுக்கட்டளைகளையோ அனுப்புபவர்கள் திருமலைமாவட்ட இந்து இளைஞர் பேரவை, கணக்கு இல. 479, இலங்கைவங்கி திருமலைக்கிளை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படியும் துண்டுப் பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கிளை நூலகம்

## இனப்பிரச்னை: இலங்கையிடமிருந்து

# எழுத்துமூலம்வாக்குறுதி

# இந்தியக் குழு பெறும்

### (இஸ்ரேலியர்கள்) (விஸாவின்றி) (வரலாம்)

[கொழும்பு]

இஸ்ரேலியர்கள் இனிமேல் விஸாவின்றி இலங்கைக்கு வர அனுமதிக்கப்படுவர் எனத் தெரியவருகிறது. ஆயினும் இலங்கையில் 30 நாட்களுக்கு மேல் தங்கியிருக்கமாட்டோம் என உறுதியளிப்பவர்களுக்கே இச் சலுகையளிக்கப்படும்.

## நாளை குழு வருகிறது

நல்லூர் கிளை நூலகம்

(சென்னை)

**இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நாளை இலங்கை வரும் அமைச்சர் தலைமையிலான குழு எழுத்து மூலமான சில வாக்குறுதிகளைப் பெறலாம் என நம்பப்படுகிறது.**

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக நாளைய தினம் இலங்கை விஜயம் செய்யும் இந்தியக் குழுவில் முன்னாள் வெளியுறவுச்செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி இம்முறை இந்தியப் பிரதமரின் விசேஷ தூதராகவன்றி இந்திய அரசாங்கத்தின் விசேஷ தூதராகவே அனுப்பப்படுகிறார் என்று அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது

இப்பேச்சுவார்த்தையின் போது இந்தியக் குழுவுக்கு இந்திய நிர்வாக சீர்திருத்த இணை அமைச்சர் திரு சிதம்பரமே தலைமை வகிப்பார் என்றும் அவரே பேச்சுக்களில் பிரதம பங்கேற்பார் என்றும் தெரியவருகிறது.

இந்த விவகாரம் திரு. பண்டாரியிடமே தனியாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்ற வகையில் ஏற்படக்கூடிய கருத்தினை நீக்குவதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது

இணை அமைச்சர் திரு. பி சிதம்பரம், திரு ரொமேஷ் பண்டாரி ஆகிய சிரேஷ்ட பிரதிநிதிகளுடன் அவர்களுக்கு ஆலோசனைவழங்கும் விதத்தில் வேறு இருவரும் அனுப்பப்படுகிறார்கள். இந்த ஆலோசகர்களில் ஒருவர் வெளிவிவகார விடயங்களில் நிபுணத்துவம் பெற்றவர் என்று கருதப்படு

(8ம் பக்கம் பார்க்க)

### பேர்ளுட் இன்று கொழும்பு வருகிறார்

[கொழும்பு]

இந்தியவுக்கான இலங்கைத் தூதர் திரு பேர்ளுட் திலகரத்தின, இலங்கை அரசின் அழைப்பின் பேரில் இன்று கொழும்பு வருகிறார்

இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசினால் புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் விடயமாக மேலதிக பேச்சுக்கள் நடத்த இந்தியாவின் நிர்வாக சீர்திருத்தத்துக்கான இணை அமைச்சர் திரு பி சிதம்பரம் தலைமை

(8ம் பக்கம் பார்க்க)

## தொண்டமனாற்றில் ஹெலிகொப்டர் சூடு

## வல்வையிலிருந்து ஷெல் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

நேற்றுக்காலையில் வானத்தில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் தொண்டமனாற்றுப் பகுதியில் திடீரெனச் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. இதன் காரணமாக பிரயாணிகளை ஏற்றிச்சென்ற வாகனம் ஒன்று சிறு சேதத்துக்குள்ளானது.

இதனைத் தொடர்ந்து காலை ஒன்பது மணி தொடக்கம் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து விட்டுவிட்டு மோட்டர் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பொலிகண்டிப் பகுதியிலுள்ள சில வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகின. ஷெல் தாக்குதல் பலமணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது.

## இலங்கை அரசுக்கு பிரிட்டனின் ஆயுதவிற்பனை தனிப்பட்ட விஷயமாம்

[புதுடில்லி]

''தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவாழும் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அப்பாவி மக்களைப் பலிகொண்ட இலங்கை இராணுவத்தின் பல நடவடிக்கைகளில் இஸ்ரேலின் 'மொஸாட்', முன்னாள் 'எஸ். ஏ எஸ்' கூலிப் படையினர் ஆகியோர் சம்பந்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளனவென்று இந்திய உள்துறைஇணைஅமைச்சர் திரு நாராயணன்தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் இதனைத் தெரிவித்த அமைச்சர் நாராயணன்,

(8ம் பக்கம் பார்க்க

### வல்வையில்..

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் வெளியேவர முயன்றதாகவும், போராளிகள் இதனை எதிர்த்துக் கைக்குண்டுகள் வீசி தடுத்ததாகவும் தெரியவருகிறது

இது இவ்வாறிருக்க நேற்று முன்தினம் இரவு கடல்பகுதியில் தெரிந்த ஒரு வெளிச்சம் இப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. கடற்படைக் கப்பலிலிருந்தும் வெளிச்சம்

8ம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் இனிமேல் இல்லை

[கொழும்பு]

எதிர்காலத்தில ஐ தே. க. பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு தொகுதியிலும் இடைத் தேர்தல்கள் நடத்துவதில்லை என ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின உயர்பீடம் முடிவெடுத்துள்ளதாக மிக நம்பிக்கையான வட்டாரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.

ஐ தே க. அரசாங்கத்தினால் 78ம ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் ஒரு தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவர் இறந்தால் அல்லது பதவிவிலகினால் அந்த அங்கத்தவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி மூன்று மாதத்தினுள் இன்னொருவரை அத்தொகுதிக்குச்

(8ம் பக்கம் பார்க்க)

## வல்வைக் கடலில் பொலித்தீன் பைகள்

### அரசவட்டாரங்கள் தகவல்

[கொழும்பு]

கடல் கண்காணிப்பு வலயத்தில் வைத்துத் தீவிரவாதிகளுக்கும் கடற் படையினருக்கும் இடையே நேற்று அதிகாலை ஏற்பட்ட நேரடி மோதலில் 6 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்

8ம் பக்கம் பார்க்க]

## கந்தளாய் குளம் உடைப்பு: அணைக்கட்டுத் தொகுதியில் வெடிமருந்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கந்தளாய் அணைக்கட்டுத் தொகுதியில் வெடிமருந்துகள் இருந்தமைக்கான ஆதாரங்கள் தற்போது கிடைத்துள்ளன.

இதனையடுத்து வெளிநாட்டு அமைச்சின் உதவியுடன் இந்திய அரசுடன் தொடர்பு கொண்டு, இந்த அணைக்கட்டு வெடிப்புக்கு உரிமை கோரியுள்ள தீவிரவாதக்குழு மீது விசாரணையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கோவில்வெவ கிராமத்தில் வசித்த பலரை இன்னமும் காணாமல் இருப்பதனால் அவர்களை விசாரணை செய்ய முடியாமல் இருப்பதாகவும், இவர்களில் ஜே வி பி. இயக்கத்தின் தமிழ் ஆதரவாளர்களும் அடங்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

(பி)

## வெருகலில் தேடுதல் வேட்டை: 10 பொதுமக்கள் கொலை

[திருகோணமலை]

வெருகல்பதி முருகன் கோவிலுக்கண்மையில் ஆயுதப்படையினர் நடத்திய தேடுதல் வேட்டையின்போது பொதுமக்கள் பத்துப் பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று பிரஜைகள் குழுவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. மூதூரிலிருந்து சுமார் 10 மைல் தூரத்தில் வெருகல் இருக்கிறது

சம்பவதினம் இரவு இப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த ஆயுதப் படையினர் வாழைத் தோட்டம் ஒன்றில் குண்டுகள் வீசியும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் தாக்குதல் நடத்தினர்

இத்தாக்குதலின்போது பலியான பத்துப்பேரில் பெண்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [மா]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C-1837]

Hitachi ரீ வி. (TV) 20'' கலர் மற்டுஸ் அன்ரனு 40' பைப்பு, பூஸ்ரர் வயர் உடன் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும். அபிராமி, மரக்காலை, க. சிவயோகநாதன், 175, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [C 2019)

எம்மிடம் புதிய றெக்கோடிங் பார் அமைப்பதற்குத் தேவையான சகல உபகரணங்கள் விற்பனைக்குண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு முன் உரிமை கொடுக்கப்படும். 2-5-86க்கு முன்னர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். எஸ்.எம்.மீரான் சாஹிப் ரான்ஸ்போட், ஏஜென்ட், 117, மானிப்பாய் ரோட், ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (C- 2028)
T. P: 23134

சுண்டிக்குளியில் நல்ல சுற்றுடலில் சகல நவீன வசதிகளுடன் பரிய வீடும் வளவும், பள்ளிக்கூடங்களுக்கும், பிரதான வீதிக்கும் அருகாமையில், உடன் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல: 1968 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 1968]

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CITIZEN - S 4 தட்டச்சு இயந்திரம் மின்சாரத்தில் இயங்குவது (1. 10 v) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு ஆனந்த் வீடியோ கோம், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். [C-2039]

S. P. பாலசுப்பிரமணியம் i சிவஸ்துதி - சிவ ஷ்டகம் இலிங்காஷ்டகம், விஸ்வநாதாஷ்டகம், பில்வாஷ்டகம், ii அம்மன் துதி - ஸ்ரீராஜராஜேஸ்வரி சுப்ரபாதம், தாய் மூகாம்பிகை துதி - ஒரே கசெற்றில் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-2038)

### சேவை

உங்களுக்குத் தேவையான ''போட்டோஸ்ரட்'' பிரதிகளை தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள; 'கிளீன் கட்' - 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 2022)

## தேவை

முல்லைத்தீவில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கிறீம் ஹவுஸ் ஒன்றிற்கு ரீமேக்கர், சப்பிளேயர், மற்றும் சிற்றுண்டி, ஐஸ்கிறீம் தயாரிப்பதில் அனுபவமுடையவர்கள் 1-5-86க்கு முன்னர் நேரில் வரவும். முகவரி: எஸ். உதயகுமார், ஈஸ்வரி றேடர்ஸ், முல்லைத்தீவு. [C-2009]

## தவறிவிட்டது

நல்லையா இரவீந்திரன் சாவகச்சேரி என்பவருடைய அடையாள அட்டை இல. 451362216V தவறிவிட்டது. கண்டெடுப்பவர் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டு கொள்கின்றோம். அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். [C 2035]

## 6th Death Anniversary



LUTHER JAMES SELVARAJAH
Fondly Remembered by
Ranee
Dusyandan,
Selva Giri Janey.
57, Arasady Road,
Jaffna. C 1993

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
மு. பரராசசிங்கம்
அன்னையின் மடியில்:
21 - 06 -1946
அரக்கர் அழிப்பில்:
09 - 05 1985
திதி: 28 - 4 - 1986


வாழ்நாளில் துன்பம் என்னவென்று அறிந்திலோம்! துயர் காணோம் என்று இறுமாந்திருந்தோம்!! சீரும், சிறப்பும், சிரிப்பும், கலகலப்புமாய் எம்மை வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவால் உலகம் எமக்கு இருட்டாய் தெரிகின்றதே வெளிச்சத்தைக் காண்பதெப்போ? உங்கள் புன்சிரிப்பையும், நீங்கள் அள்ளிச் சொரிந்த அன்பையும், பாசத்தையும் இப் பிறவியில் எம்மால் மறக்கத்தான் முடியுமா?

மீளாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும்:
அன்பு மனைவி, சிவமணி,
பாசமைந்தர்:
ப. சிவராசசிங்கம்,
ப. ஜெயராசசிங்கம்,
ப. தவராசசிங்கம்,
பாசமகள்: ப. சிவரதி,
பெற்றோர், சகோதர,
சகோதரிகள்,
மருமக்கள், மாமன்,
மாமி, உறவினர்,
நண்பர்கள்.

புதுவளவு,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.
[C 2001]

## ஓராண்டு நிறைவஞ்சலி



அமரர்
மு. சின்னப்பு
(சாமி)
அவர்கள்
ஆண்டவன் படைப்பு:
1942- 09- 05
அரக்கர் அழிப்பு:
1985- 05- 09
திதி: 28- 04- 1986

அணையாத ஜோதியாய்த் திகழ்ந்த அன்புத் தெய்வமே, ஆள்பவன் பறித்தெடுத்தான் உங்கள் ஆருயிரை. அன்றுமுதல்:

கண்ணிலே உறக்கம்
அற்றோம்
கருத்தினில் மாற்றம்
உற்றோம்
எண்ணரிடு பலவும்
அற்றோம்
இங்கினி என்ன
உண்டு
மண்ணினில் மடிந்தாய்
அந்தோ
மதிப்பரு துயரும்
உற்றோம்
விண்ணினில் வாழ்ந்தே
என்றும்
விருப்புற அருள்செய்
வாயே!
சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்பு மனைவி:
சந்திராவதி சின்னப்பு,
பிள்ளைகள்:-
செல்வி உதயநிலா
சின்னப்பு,
செல்வன் உதயச்
சந்திரன் சின்னப்பு,
செல்வி கல்பனா
சின்னப்பு,
செல்வி சோபனா
சின்னப்பு.

நல்வேப்பங்கூடல்-
பாடசாலை வதி,
பொலிகண்டி-
சமரபாகு,
வல்வெட்டித்துறை,
[C 2002]

## கல்வித் திணைக்களம் - கிளிநொச்சி

# பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சிக் கல்வித்திணைக்கள பிராந்திய கல்விப் பணிப்பாளராகிய என்னால் கிளிநொச்சி கல்விமாவட்டத்தில் கீழ்க்காணும் நிர்மாண வேலைகளுக்கான கேள்விகள் 1986-05-08ந் திகதி பி. ப. 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலையின் தன்மை | கோரப்படும் பதிவுத்தொகை |
|---|---|---|
| 1. பெரியகுளம் ஐயனார் வித்தியாலயம் | நீடிப்பு-களஞ்சிய அறை 20'X20' | ரூபா 100, 000/- |
| 2. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் | நீடிப்பு மேல்மாடி 40'X25' | ரூபா 200, 000/- |
| 3. இயக்கச்சி அ.த.க.பா. | புதிய கட்டிடம் அமைத்தல் 80'X20' | ரூபா 300, 000/- |
| 4. அக்கராயன் அ.த.க.பா. | புதிய கட்டிடம் அமைத்தல் 60'X20' | ரூபா 200, 000/- |
| 5. கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் | புதிய கட்டிடம் அமைத்தல் 60'X20' | ரூபா 200, 000/- |
| 6. வேரவில் அ.த.க.பா. | ஆசிரியர் விடுதி | ரூபா 200, 000/- |
| 7. நாச்சிக்குடா அ.த.க.பா. | ஆசிரியர் விடுதி | ரூபா 200, 000/- |
| 8. கிளிநொச்சி இந்து ம.வி. | பூச்சுவேலைகள் | ரூபா 50, 000/- |

ஒப்பந்த வேலைகளுக்கான பதிவை உறுதிப்படுத்தும் ஒப்பந்தக்காரருக்கு 1986-05-06ந் திகதி மாலை 3-00மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களை பெறவிரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் கிளிநொச்சி பிராந்திய கல்விப்பணிப்பாளரின் பேரில் கிளிநொச்சிக் கச்சேரியில் ரூபா 125/-ஐ வைப்புப்பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பிக்கவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் அனுப்பப்படுவதோடு ஒவ்வொரு வேலைக்கும் புறம்பான உறை உபயோகிக்கப்பட வேண்டும். உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் விபரத்தையும், பாடசாலையின் பெயரையும் குறிப்பிடவும். கேள்விப்பத்திரங்கள் 1986-05-08 பி. ப. 2-00 மணிக்கு திறக்கப்படும். ஏனைய விபரங்களை இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எம். மன்சூர்.
பிரதேச கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி, 1986-04-25. (A-625)

## உடன் பிரயாண ஒழுங்குகள்

இடம்:
டுபாய் அலுமினியம் தொழிற்சாலை உதவியாளர்
உணவு, இருப்பிடம், வைத்தியம்,
திரும்பி வரும்போது பிரயாண டிக்கட் செலவு
முதலியன இலவசம்

பாஸ்போட்டில் உள்ள 2-ம், 3-ம், 4-ம், 5-ம் பக்கங்களின் பதிவுப் பிரதியும், 6 நிழற்படங்களின் பிரதி என்பவற்றுடன் நேரில் தொடர் கொள்ளவும்.

பெண்களுக்கு குவைத் நகரில் வேலைவாய்ப்பு
வயது: 20 — 30
உடன் 6 படங்களுடனும், பாஸ்போட் இரு பிரதி, கலர் போட்டோவுடன் வரவும் (முழுப்படம்).
மற்றும்

- ★ எந்தவொரு நாட்டிற்கும் விமானப் பயணச்சீட்டு, இந்தியா செல்வற்கான விசா, பயணச்சீட்டுக்கள் என்பன குறைந்த விலையில் பெற்றுத்தரப்படும்.
- ★ பாஸ்போட், BONDING முதலிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்,
- ★ பாஸ்போட் எடுப்பதற்கு உரிய எந்தப் பிரச்னையும் தீர்த்து வைக்கப்படும்.
- ★ வெளிநாட்டில் இருந்து வரும் பொருட்களை கொழும்பிலுள்ள சுங்கப்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துத் தர வசதிகள் செய்யப்படும்.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்:
நிர்வாக இயக்குனர்,
துர்க்கா சினிமா, காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.
(C 2036)

உலகச் செய்திகள்

# "மேற்கு ஐரோப்பாவில் லிபியர் மீது கட்டுப்பாடு விதித்தால் பதில் நடவடிக்கை எடுக்கப்படும்"

## லிபியா எச்சரிக்கை

(திரிப்பொலி)

மேற்கைரோப்பிய நகரங்களில் வாழும் லிபியப் பிரஜைகள் மீது தேவையற்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமானல் தாம் அதற்கு எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டி வரும் என லிபிய வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பல மேற்கைரோப்பிய நாடுகள், தங்கள் நாடுகளிலுள்ள லிபியப் பிரஜைகளில் பலரை நாடுகடத்தவும், ஏஞ்சியோரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் தீர்மானித்துள்ளன. இத்தாலி அங்குள்ள லிபியத் தூதரக ஊழியர்களின் எண்ணிக்கையை 50லிருந்து 10 ஆகக் குறைத்துக்கொள்ளும்படி லிபியாவைக் கேட்டுள்ளது.

இந் நடவடிக்கையையடுத்து லிபியாவிலுள்ள பல மேற்கைரோப்பிய ராஜதந்திரிகள் லிபிய வெளிநாட்டமைச்சுக்கு அழைக்கப்பட்டு மேற்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தமது நாட்டுக்கும், சர்வதேச பயங்கரவாதிகளிற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என அறிவித்த லிபிய வெளிநாட்டமைச்சு அதிகாரிகள், மேற்கைரோப்பிய நாடுகளின் இந்நடவடிக்கைகளுக்கு பதில் நடவடிக்கைகளை தாம் எடுக்க வேண்டியிருக்கும் எனக்கூறியுள்ளனர். ஆயினும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர்கள் கூறவில்லை.

இதனிடையே, சோவியத் ஏவுகணைக்கப்பல் ஒன்று திரிப்பொலி துறைமுகத்தினுள் பிரவேசித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவுக்குச் சென்றுள்ள இரண்டாவது சோவியத்யுத்தக்கப்பல் இதுவாகும். இதன் முன்னரும் சோவியத்தின் நவீன யுத்தக்கப்பல் ஒன்று லிபியாவினுள் பிரவேசித்தது (செ)

## உல்லாசப் பயணிகள் வருகையில் வீழ்ச்சி

[வாஷிங்டன்]

இவ்வருடம் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்யும் அமெரிக்க உல்லாசப் பிரயாணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

லிபியா மீதான அமெரிக்கத் தாக்குதல்களையடுத்து ஐரோப்பிய நாடுகளில் பயங்கரவாதச் செயல்கள் அதிகரிக்கும் என அஞ்சப்படுவதுடன் இவை விசேடமாக அங்குள்ள அமெரிக்க மக்களுக்கெதிராகவே மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் அமெரிக்க மக்கள் ஐரோப்பிய நகரங்களுக்குச் செல்ல அஞ்சுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாடு கடத்தப்படுவதைத் தடுக்க கண்ணுடியால் தம்மைத்தாமே குத்திஞராம்

[கொழும்பு]

போலிக் கடவுச்சீட்டின் மூலம் லண்டன் நகருள் நுழைய முயன்ற இலங்கைத் தமிழர் ஒருவர் தாம் அங்கிருந்து நாடு கடத்தப்படுவதைத் தடுக்குமுகமாகக் கண்ணுடி ஒன்றினால் தம்மைக் குத்திக் காயப்படுத்தியதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

"போலி நெதர்லாந்து கடவுச்சீட்டுடன் லண்டன் வந்த இவரை ஹீத்ரோ விமானநிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் தடுத்துள்ளனர். அப்போது இவர் சுகாதாரக் கூடமொன்றுக்குள் போய்வருவதாகக் கூறி அங்கு சென்று கண்ணுடியினால் தம்மைக் குத்தியுள்ளார். பின்னர் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட அவர் இப்போது தேறிவருகிறார்" என அரசாங்கம் இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாக்., இந்தியாவில் பூமியதிர்ச்சி இருவர் பலி!

[புதுடில்லி]

இந்தியத்தலைநகரான புதுடில்லியிலும், இமயமலைப் பிரதேசத்திலும் நேற்றும் நேற்றுமுன்தினமும் பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இப்பூமியதிர்ச்சியினால் பலத்த சேதம் ஏதும் ஏற்படவில்லையாயினும் இமாலயப் பிரதேசத்தில் பல கட்டிடங்கள், வீடுகள் நாசமாக்கப்பட்டுள்ளன. இப்பூமியதிர்ச்சியினால் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். காயப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை இன்னமும் சரியாகக் கணக்கிடப்படவில்லை.

தொடர்ந்து இங்கு கடும் மழை பெய்கிறது. சுமார் ஒரு அடி உயரத்துக்குப் பனிக்கட்டி உறைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

### பாகிஸ்தானில்...

இதனிடையே பாகிஸ்தானின் இந்துகுஷ் மலைச்சாரல் பகுதியிலும் நேற்றுமுன்தினம் பலத்த பூமியதிர்ச்சி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பூமியதிர்ச்சியின் தாக்கங்கள் லகூர், ராவல்பிண்டிப் பகுதிகளிலும் காணப்பட்டன எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## 40 பேர் பலி

(லக்னே)

வட இந்தியாவிலுள்ள இந்துக்கள் புனித தலமொன்றுக்கு விஜயம் செய்துகொண்டிருந்த யாத்திரிகர்களின் பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதால் அதிலிருந்த 40 பேர் மரணமானுர்கள்.

இத்துரதிர்ஷ்டமான சம்பவம் வட இந்திய நகரான உத்தரப் பிரதேசத்தில் நடந்தது. இந்தப்பஸ் பஸ் ஓட்டுநரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி அருகிலிருந்த ஆற்றினுள் பாய்ந்தது. (செ)

## அமெரிக்க உளவாளிக்கு எட்டு வருட சிறை!

[வார்ஸோ]

அமெரிக்காவுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் போலிஷ் பிரஜை ஒருவருக்கு அந்நாட்டு ராணுவ நீதிமன்றமொன்று எட்டு வருட சிறைத் தண்டனைவிதித்துள்ளது.

திரு. சன்யார்ஸ்கி எனப்படும் இந்நபர் 74ம் ஆண்டு முதல் கடந்த ஆகஸ்ட்டில் கைது செய்யப்படும்வரை போலிஷ் ராணுவ மற்றும் சமூக, அரசியல் பிரச்சினைகளைப்பற்றிய தகவல்களை அமெரிக்காவின் சி ஐ ஏ நிறுவனத்திற்கு அளித்து வந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சி. ஐ. ஏ. அவருக்கு சுமார் 15 000 டாலர்களை வழங்கியிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது. (செ)

## ஹெய்த்தியில் ஊர்வலத்தினர் மீது சூடு மூவர் பலி! பலர் காயம்!!

(லண்டன்)

ஹெய்த்தியில், ஊர்வலம் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

தென் கரிபீயத்தீவான ஹெய்த்தியில் முன்னுள் சர்வாதிகாரியான டுவாலியர் நாட்டை விட்டு ஓடியபின் அந்நாட்டு ராணுவத்தினர் மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு பலரைக் கொன்றுள்ளது, இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயிரக்கணக்கான மக்கள் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினர். முன்னுள் சர்வாதிகாரி டுவாலியரின் ஆட்சியில் மரணித்தவர்கள் நினைவாகவே இவ் ஊர்வலம் நடைபெற்றது. முதலில் கண்ணீர்ப்புகையை உபயோகித்த ராணுவத்தினர் பின்னர் ஊர்வலத்தினர்மீது கண்மூடித்தனமாக சுட ஆரம்பித்தனர் என ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர் [செ]

## மக்கள் எழுச்சித் தினமாக அமையவேண்டும்

(யாழ்ப்பாணம்)

'மேதின பிரகடனத்தின் நூற்றுண்டு விழாவாக இம்முறை மேதினம் அமைவதால் யாழ்ப்பாண சரித்திரம் கண்டிராத வகையில், பிரமாண்டமான மக்கள் எழுச்சி தினமாக அமைய செயல்படவேண்டும் என்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ் மாவட்ட குழு செயலாளர் பொன் குமாரசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"உழைக்கும் மக்களும் ஒடுக்கப்படும் மக்களும் ஒன்று சேருங்கள்" என்றகோசத்தை முன்வைத்து மேதினம் நடத்தப்படுவதும் முக்கியமாகின்றது. தமிழ்பேசும் மக்களின் ஒடுக்குமுறைக்கெதிராகவும் உழைக்கும் மக்களின் விடுதலைக்காகவும் கிளர்ச்சி செய்வது பொருத்தமானதாகும்.

தொழிற் சங்கங்களும், வெகுஜன அமைப்புக்களும் இணைந்து சுன்னுகத்தில் நடத்தவுள்ள மேதினத்தில் பங்குகொண்டு கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களும், ஆதரவாளர்களும் கட்சியின் வெகுஜன அமைப்புக்களும் ஊக்கமுடன் செயல்படவேண்டும் என்று கேட்டுள்ளார். (க)

## மின் ஊழியர்கள்மீது தாக்குதல்: "மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்படும்'

### ஆணையாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசடி வீதிப் பகுதியில் நேற்று முன் தினம் சட்டவிரோத மின் பாவனையை அகற்றச் சென்ற யாழ். மாநகர சபை ஊழியர்கள் தாக்கப்பட்டார்கள். ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முற்பட்டபோது தாக்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதால் வேலை நிறுத்தம் நடைபெறவில்லை

இச் சம்பவம் தொடர்பாக யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

'ஊழியர்களைத்தாக்கியவர்களுக்கு எதிராக இளைஞர்களும் பொது ஸ்தாபனங்களும், மன்றங்களும், பாவனையாளர்களும் வரியிருப்பாளர்களும் ஒன்று சேர்ந்து இனம் கண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

"இப்படியான நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் முன்னைய ஆண்டு நடந்தது போல் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டு நல்லூர்ப் பகுதி இருளில் மூழ்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படக்கூடுமென்பதை பொது மக்களுக்கு மன வருத்தத்துடன்

(7ம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழர் செயல் குறித்து அந்நாட்டுப் பிரதமர் கண்டனம்!

### அகதி முகாம்களில் உண்ணுவிரதம்!!

(கொழும்பு)

நெதர்லாந்தில உள்ள இலங்கை தமிழ் அகதிகள் அண்மைக்காலமாக நடந்துகொள்ளும் விதம் மன்னிக்க முடியாத குற்றச்செயல் என அந்நாட்டுப் பிரதமர் திரு. லுபேர்ஸ் தெரிவித்துள்ளதாக இலங்கை அரசு கூறுகிறது.

நெதர்லாந்தின் வடகிழக்குப்பகுதியில் உள்ள முகாம் ஒன்றினுள் உள்ள தமிழ் அகதிகள் தமக்கு அளித்துள்ள வசதிகள் குறித்து அதிருப்தி தெரிவித்து கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர் இதன் முன்னரும் வேறு நான்கு முகாம்களில் ஒருவிடுதி முற்றாகச் சேதமாக்கப்பட்டதாகவும், இது சம்பந்தமாக 27 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெதர்லாந்து நல்வாழ்வுத் துறை அமைச்சர் அங்குள்ள தமிழ் அகதிகளுக்கு எழுதிய கடிதமொன்றில் இது குறித்துத்தமது அதிருப்தியை வெளியிட்டிருப்பதுடன், இவர்களின் புகலிட விண்ணப்பங்களை ஆராய மேலதிகமாக பலர் நியமிக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, அகதிமுகாம்களிலுள்ள தமது நிலையைடுத்து விளக்கும் பொருட்டு சுமார் 1500 அகதிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணுவிரதம் இருந்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தமது முகாம்களில் ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதுடன், தமக்குத் தரப்படும் உதவிப்பணம் போதாது எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (செ)

# நமது நோக்கு

## 'சிதம்பரம்' வந்துபோனது; சிதம்பரம் வருகிறுர்

கா லஞ்சென்ற இந்தி ப்பிரமர் இந்திராவின் பணிப்புரை ல் ாழ்அ+தி க கொழும்பிலிருந்து ய ழ்ப்ப ணம் கொண்டு பே வதற்க வந்த அழகான 'சிதம் ரம்' என்ற ப்ப லுக்கு நாம் அளித்த வா வேற்பு கண்ணூ ப ் டு விட்டது.

''தி லேச் சிதம்பரதேவா உன்சித்தம் திரும்பி ட்டால் உனக்கென்றே ங்கு வாழ் துவரும் பழங்குடிக ளுக்கு எவ்வித அழிவும் ஏற்படாதென்று'' அன்று குறிப்பிட்டிருந்தே ம்.

கப்பலில் வந்த அகதிகள் நடராஜ தரிசனத்தின்பேறு பெற்றவ கள்போல காட்சி யளித்த ர்; ஆனல் நடந்த தென்ன? திரும்பிவருவே ம் உ தவி ளிப்போமென்று சொல்லி மலர்ந்த முகத் துடன் சென்ற க பலதிகா ரிகள் கப்பல் எரிந்த காட் சியைக் காணவேண்டியிருந் தது.

அன்று மெய்யாயிருந்த தோற்றம் ன்று வெட்ட வெறும் பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல் லப்போய்விட்டது.

நாளை இந்தியாவிலிருந்து ஐந்தாவது முறைவரும் 'சூரன்' பண்டாரி இந்திரா காங்கிரஸ் வெளி யுறவு பிரிவுத்தலைவரென் வேடம் தாங்கிவருகிறுர். நான்குமுறை வந்துபோன பெரிய விலாசம் கொண்ட பண்டாரி இன்று மாமரமா கவா வருகிறுர்? இத்தகைய ஐயுறவுக்கு இடமிருந்ததை பல பத்திரிகைகள் பிரஸ் தாபித்தன. இலங்கை அ சின் சாணக்கியம் இலகு வானதல்ல.

அரசியல் ஞானத்திலும், சிக்கல்களைச் சிதற அடிக் கும் சாதுரியத்திலும் அகில உலகுமே புகழும் இந்திரா காந்தியைப் பேய்க்காட் டின இலங்கை அரசு இன்று யாருக்குத் தயங்கும்.

திரு. பார்த்தசாரதி விஷ் ணுவின் வடிவமாயிருந்தா லும், தமிழன் தானே என்ற சந்தேகத்தால் ரொமேஷ் பண்டாரி பரவாயில்லை என்று கிடந்த இலங்கை அரசின் ஆசையைப் பிரத மர் ராஜீவ் தீர்த்து வைத் தார். இருந்தும் தேரோட் டம் நிறைவேறவில்லை.

முழுதாகக் கடவுளின் நாமம் தாங்கிய திரு. சிதம் பரம் ஒருவரில் மீண்டும் நாம் நம்பிக்கைகொள்ள வேண்டியிருக்கிறது.

யார் இந்தச் சிதம்பரம்? மத்திய நிர்வாக சீர்திருத்த இணை அமைச்சரும், இந் திரா காங்கிரஸ் எம். பி. யுமென அறிமுகம் செய் யப்பட்டிருக்கிறுர்.

அதிகாரப் பரவல் என்ற பண்டைய மந்திரம் இன்று என்னவாகத் தொழிற் படும்? கானல்நீராக அல் லாது இரத்தவெள்ளத்தின் கறையை நீக்கவல்ல தூய நீரூற்றுய் இதனைப் பரி சீலிக்க நாளை வருகிற ''இந் தியப் பட்டாளம்'' எவ் வாறு உதவும்?

நாடென்றுல் இலங்கை அரசுக்கு முதற்கண்தோன் றுவது புள்ளிகள். கந்தளா யில் என்னதொகை, அநு ராதபுரத்தில் எத்தனை, வெள்ளவத்தையின் பிந்திய செய்தி என்ன? பாதுகாப்புப் படையினர் கொல்வதெல் லாம் தமிழ்ப் பயங்கரவாதி கள்; தமிழ்ப் போராளிகள் கொல்வதெல்லாம் அப் பாவி சிங்கள தமிழ்மக்கள்.

பாராளுமன்றத்தில் மத வாச்சி எம். பி ''...எனவே இங்குநடைபெறுவது ஒரு சிவில்யுத்தம்'' என்ற கண்டு பிடிப்பை சமர்ப்பித்தார்.

என்ன நட்டம் நேர்ந்தா லும் நேர இருந்தாலும் அதற்கெல்லாம் நிதிஉதவி இங்கு தயாராகிவிட்ட தென்ற செய்தியை நிதி அமைச்சர் அமெரிக்காவி லிருந்து அவசரம் அவசர மாக அனுப்பியிருக்கிறுர்.

எல்லாம்வல்ல இலங்கை அரசு, இன்று நாட்டின் நாலாபக்கத்திலும் தொட ரும் அழிவைத்தடுக்க முடி யாது தத்தளிக்கிறது.

இந்தப் பயங்கர நிலை யைத்தடுக்க இலங்கை ராணுவம் வடக்கிலும், கிழக்கிலும்மிருந்து பாது காப்பாகத் திரும்பவேண் டும். நாளைவரும் இந்தியப் பிரதிநிதிகள் இதற்கு வாதாடி வெற்றிகாண வேண்டும். தமிழ்ப்போராளி களின் உள்ளக்கிடக்கை அறி ந்து சமாதானமான சூழ் நிலை உருவாக்க இதுஇன்றி யமையாத முதற்படி.

# "நிக்கரகுவா இன்னெரு 'லிபியா' அதற்கும் அதே கதி" என்கிறுர் ஜனதிபதி றீகன்




**நிக்கரகுவா**

எவ்வாறு ஜனதிபதி நிக் ஸன் வியட்நாம் போரில் அமெரிக்கா மண்கவ்வும் என் பதை அறிந்து அமெரிக்க மக் களின் காலம் தாழ்த்திய அரசியல் ஞானத்தை உணர்ந்து அந்த நீண்டகாலப் போரை நிறுத்தினரோ, அதேபோல் இன்று ஜனதிபதி றீகன் நிக்கரகுவாவில் தொட ரும் போரைத் தீவிரப்படுத் துவதால் அவ்வித முடிவு ஏற்ப் படலாம்.

இன்று ஜனதிபதி றீகனுக்கு ஆத்திரம் ஊட்டும் விடயம் நிக்கரகுவா என்பது வெளி உலகுக்கு நன்றாகத் தெரியாது, லிபியாவில் நடத்திய தாக்கு தலுக்கு நிக்கராகுவாவில் உரு வாகும் பார் வெள்ளை மாளிகைக்கு உண்டாக்கிய பயங்கரத் தலையிடி காரண மெனலாம்.

ஐக்கிய அமெரிக்காவுக்கு அடுத்த வீடாகிய கம்மியூ னிஸ்ட் கியூபா எத்தகைய அச்சுறுத்தல் என்பதை அறிந் தவர்கள், தேசத்தின் எல்லை யில், மத்திய அமெரிக்காவில் இன்னெருநாடு நிக்கரகுவா கம்மியூனிஸ்ட் ஆட்சியில் பலம் பெற்றுல், மத்திய அமெரிக்கா முழுவதிலும் அதுபரவுவது தவிர்க்க முடி யாது வரும். இதுவே சின்ன 'லிபியா' 'பெரிய லிபியா' என்ற பரிகாசத்தின் அடிப் படை.

இரண்டு முகங்கள் றீக னுக்கு அடியோடு பிடியா — ஒன்று கேணல் கடாபி. மற் றது நிக்கரகுவாவின் தலைவர் ஒட்டேகாவுமே; பயங்கர வாதத்தின் இருப்பிடம், பீ எல் ஓ ன் வலது கர மான லிபியா அதிபர் அமெ ரிக்காவுக்கு எதிராக பயங்கர வாதத்தை ஏவி விடுவதால் லிபியாவைத் தாக்கியதோடு அதனை ஒதுக்கி வைக்கவேண்டு மென்று ஐரோப்பாவைக் கேட்கிறுர் றீகன்.

நிக்கரகுவாவில் கம்மியூனிஸ்ட் ஆட்சி பலமடைந்தால் ஐக்கிய அமெரிக்காவுக்கே அச்சுறுத தல்- இதனை அமெரிக்க மக்க ளும், காங்கிரசும் நன்றுய் உணரவில்லையே என்ற கவலை, றீகனின் மன அமைதிக்கு பெரும் சவாலாக இருக்கின் றது.

வியட்நாமிற்குப் பின் வேறெந்தப் பிரச்னையும் காங் கிரசுக்கும் ஜனதிபதிக்கும் இத் தகைய பிணக்கை ஏற்படுத்த வில்லை.

நிக்கரகுவா தனக்கென ஒரு புதிய ஆட்சியைத் தேர்ந் தெடுத்திருக்கிறது. அதன் தலை வர் ஒட்டேகா கியுபாவிடம்' ரஷ்யாவிடம், வேறு சோஷ லிச நாடுகளிடம் உதவி தேடி வறுமைக்குள்ளான நாட்டைச் சீரான ஆட்சியில் சட்டி எழுப்ப முயல்கின்றுர்.

### மார்க்ஸிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி

மார்க்ஸிய அரசுக்கு எவ் வித உதவியும் நல்க மாட் டோம் என்றும், இந்த சன்டி னிஸ்டா ஆட்சிக்கெதிராக, வீண் போரில் விரயமாகும் 'கொன்ரு'ஸ் என்ற கெரிலாப் போருக்கு வேண்டிய உதவி அளித்து நிக்கரகுவாவைத் தோற்கடிக்கப் பத்துக் கோடி டொலர் உதவி அமெரிக்க காங்கிரஸ் வழங்க வேண்டு மென்று வாதாடும் றீகனுக்கு வெற்றி கிட்டவில்லை

எவ்வகைய முடித்து மென்ற தீவிர மாகஆவது த தால் ஜனதிப பதியாக விள முடைந்திருக்

மார்ச் 28 ல் கையை காங் தது, வேண்ட னற்றபோர் தம்''அந்தநா கரிநாள்'' என் கப் பேசும் றீகன்.

இன்று உல கரவாதத்தை நிறுவன பதாக தெளி தால் அங்கெல் விமானப்படை நடத்த றீகன் ருக்கிறுர்.

**எதுபயங்கர**

ஆப்கானுக் போராடும்

## யாழ்ப்பாணத்தின் 'சாதிமான்களுக்கு' பக்கிங்ஹாமமாளிகை சொல்லும் சோகக் கதை; பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிஸபெத்தின் 'சஷ்டியப்த பூர்த்தி விழா'வைக் குழப்பாது நாளை நடைபெறும் அவருடைய 'பெரியம்மாவின்' நல்லடக்கம்.

**இலண்டன்**

கிளியப் பெற்றா என்னும் அரச அழகியின் மூக்கில் மயங் கிய ரோமாபுரி தலைவன் அன் ரனி ரோம ஏகாதிபத்திய த்தையே கைவிட்டான். இதனை மிகச் சுவையான துன் பியல் நாடகத்தில் வடித்திருக் கிறுர் ஷேக்ஸ்பியர்.

எங்கள் காலத்தில் இதனை முறியடிக்கும் வகையில் நடந்த பிரிட்டிஷ் அரசர் எட்டாவது திட்வேர்ட் மன்னர் நடத் எய நாடகம் நாளை முடிவ டைகிறது.

ஒரு பெண்ணின் காதலுக்கு பிரிட்டிஷ் பேரரசைத் துறக் கிறேன் என்று தொடங்கும் பேச்சு 1936 டிசம்பரில் பிரிட்டிஷ் மக்களுக்கும். உலகுக்கு எட்வேட் மன்னர் நிகழ்த்தியபேச்சு. அதனை வானெலியில் கேட்டபலர்கண் ணீர் விட்டனர். அதேபேச்சை அவர் 1972ல் மறைந்தபோது லண்டன் பீ.பீ.சீ. ஒலிபரப்பி யது பேச்சின் பெருமை எள்ள ளவும் குறையவில்லை.

தகப்பனுர் ஐந்தாம்ஜோர்ஜ் மன்னர் இறந்தபின் பட்டத் துக்கு வந்த வேல்ஸ் இள வரசர் எட்வேர்ட் சுமார் ஒருவருடம் பிரிட்டிஷ் மன்னராக நாட்டைப் பரி பாலித்தார். பொதுமக்களின் 'மன்னன்' என்ற புகழைத் தேடிய எட்டாம்எட்வேட் முடி சூட்டுவைபவத்துக்குவேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றன.

### மணமா முடியா?

இதற்கிடையில் இரண்டுதரம் மணமுடித்த அமெரிக்க பெண் மணி திருமதி சிம்சனில் காதல் கொண்ட எட்வேட் மன்னர் அப்பெண்ணின் விவாகரத்தின் பின் அவளை விவாகஞ்செய்ய ஆயத்தமானுர். பிரிட்டிஷ் அரசகுடும்பம், பிரிட்டிஷ் பிர தமர், பிரிட்டிஷ் பொதுமக்கள் பேரில் அதனை எதிர்த்தனர். மணம்முடித்தால் முடிசூட்டல் இல்லை. காதலா முடியா என்ற கேள்விக்கு காதல் என்று விடையளித்த அருமந்த அர சன் முடிதுறந்து நிகழ்த்திய பேச்சு எத்தகைய மனிதனை பிரிட்டன் அரசனுகக் கிடைக் கும் வாய்ப்பை இழந்தது என் பதை என்றும் விளக்கும்.

முடிதுறந்து வின்சர் கோமக னுகவும், மனைவி வின்சர் சீமாட்டியாகவும், பாரிஸில் 36 ஆண்டுகளாக வாழ்ந்த தம் பதிகள் காதலுக்காக முடியை இழந்ததையிட்டு என்றும் கவ லைப்படவில்லை.

### கோமகனின் அழியாத காதல்

ஆனல் பிரிட்டிஷ் அரசகுடும் பம் அவர்களை ஒதுக்கி வைத் தது. மனைவிக்கு 'மேன்மை தங் கிய கோமகள்' என்ற பட் டத்தை மறுத்தது. ஆனல் கோமகன் இறப்பதற்குமுன் தம்முடைய மனைவியின் கல் லறை வின்ட்சர் அரண்மனை கல்லறையில் தமக்கருகே இருக் கவேண்டுமென்ற உத்தரவா தத்தை பெற்றிருந்தார். பாரி ஸில் சென்றவாரம் காலமான வின்ட்சர் சீமாட்டிக்கு வயது 89. 35 வருட மணவாழ்வில் பலரும் மணமும் போல் வாழ்ந்த தம்பதிகள் உலகின் மிகக்கவர்ச்சியான சோடி யென்று நாகரிகஉலகம் கணித் தது. வின்ட்சர் ரபெஸ்ரிறி (Windsor Tapestry) என்ற நாவல் இதனை படம்பிடிக்கி றது. ஆனல் பக்கிங்ஹாம் மாளிகை அவர்களுக்கு கத வடைத்தது.

வின்ட்சர்சீமாட்டியின் காதல் பிரிட்டிஷ் வரலாற்றை மாற் றியமைத்ததால் இன்றைய மகாராணி பட்டத்துக்கு வர வழிபிறந்தது. இன்று மகா ராணியின் 60வது பிறந்ததினக் கொண்டாட்டத்துக்கு ஊறு விளைவிக்காமல் நாளை நட பெறும் நல்லடக்கத்துடன் அந் தக்கதை முடிவடைகிறது.


கால் நூ
மேலாக
முன்



முதல் தர பி.வீ.சீ. குழாய்

வகையிலும் இதனை
ந்து வைக்க வேண்டு
ாற தீவிரம், தற்காலிக
ஆவது தடைப்பட்டிருப்ப
ஜனாதிபதிகளுக்கு ஜனாதி
ாக விளங்கும ரீகன மன
—ந்திருக்கிறார்.
ர்ச் 28 ல் இந்தக் கோரிக்
யை காங்கிரஸ் நிராகரித்
வேண்டாம் இந்த பய
ாபோர் என்பதே அர்த்
அந்தநாள் சுதந்திரத்தின்
ாள்'' என்றார் சாதுரியமா
பேசும் திறமையுடைய
.
ன்றுஉலகெங்கிலும், பயங்
ாதத்தை தூண்டி வரும்
ன மோ அரசோஇருப்
தெளிவான சான்றிருந்
அங்கெல்லாம் அமெரிக்க
னப்படை தாக்குதல்
த ரீகன் உறுதியளித்தி
றார்.

### பயங்கரவாதம்

ப்கானுககு எதிராகப்
ாடும் கெரிலாக்களுக்கு புதுவித ஆயுத உபகரணம் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுகிறது. நிக்கரகுவாவுக்கு எதிரானகெரிலாப்படைககு ஆயுத உதவி, வேண்டுமானால் நேரடி யுத்தம் என்றஅளவிற்கு அகில உலகுக்கும் அச்சுறுத்தி வரும ஜனாதிபதி ரீகனின லிபியாத் தாக்குதலை மெல்ல மெல்ல ஐரோப்பிய சமூகம் ஆதரிக்காத் தொடங்குகிறது. தாக்குதல் ஐ.நா சாசனத்துக்கு முரணாக இருக்கலாம். ஆனால் ஐரோப்பியசமுதாயம் பாலைவனராஜாக்களுக்கு அடிபணிவாதா?.

லிபிய்ய விசர்நாய் அமெரிக்க சந்திரனைப் பார்த்து? குரைப்பதா ஆங்கிலசடைநாயின் ஆதரவு அபயமளிக்கிறது

### ஆண்டிகள் என்ன செய்கின்றனர்

ரீகனின் கலகம் பிறந்ததால் உலகில் நியாயம் பிறக்க வழி வகுக்கவேண்டும்?

"இன்று அமெரிக்காவும் இஸ்ரேலும சேர்ந்து உலகைச் சுருட்டிவிட முயலுகின்றன. முதல அரபுககளை பலவீனப படுத்தி, பாலஸ்தீனியர்களை அழித்து ஒழித்து விட்டால் உலக ஆதிக்கம தானாகவே வரும்'' இந்த உககிரப் போக்கை ஒழிக்க உலகம் முழுவதிலுள்ள புரட்சிகரக குழுக்கள் ஒற்றுமைப்பட வேண்டுமென்று இரகசியக் கூட்டம் கூடுகிறார். பாலஸ தீன விடுதலை முன்னணியின தலைவர் அபூஅப்பாஸ்.

## சூசையப்பர் திருநாள்

(யாழ்ப்பாணம்)

மயிலங்கூடல் இளவாலையில உள்ள புனித அ.. வேளாங்கன்னி மாதா ஆலயத்தில் சூசையப்பரின திருநாள் இன்று திரிதின ஆராதனை உடன் ஆரம்பமாகும்

## லோங் அடிகள் சிராத்ததினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செண். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் வண. லோங் அடிகளாரின் 25-வது சிராத்த தினம் எதிர்வரும 30-ம திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப் படவிருககிறது.


அன்றைய தினம் பிற்பகல் 5-30-க்கு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக செண் பற்றிக்ஸ் கல்லூரியின் தேவாலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புககொடுக்கப்படும். இதைத் தொடர்ந்து, செண். பற்றிக்ஸ் கல்லூரியின பழைய மாணவர் மண்டபத்தில், வண. லோங் அடிகளாரின் உருவப்படம் கலலூரியின் தற்போதைய அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் தலைமையில் திரைநீககம் செய்து வைக்கப்படும். [வி]


**எம்பயர் திரையில்**
பாக்கியராஜ்-கல்பனா
**சின்னவீடு**

**லிடோ Jaffna**
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சுபபிரமணியம் நேசதுரை**

அன்னையின் மடியில்:
6-4-1952
பண்ணையில் பாதகனின்
குண்டின் இரையில்:
9-5-1985

உற்றார் கலங்க ஊரார் புலம்ப, பெற்றோர் கதறியழ, சகோதரங்கள் பதைபதைக்க, மனைவி பிள்ளைகள் புலம்பியழ எங்களை விட்டுப் பிரிந்தாய். உன் பிரிவால் ஏங்கித் தவிக்கிறோம்.

உன மலர்ந்தவதனமும், புன்சிரிப்பும், அன்புப்பேச்சும் என்றும் எங்கள் மனத்தில் வேரூன்றி நிற்கும்.

மனைவி, பிள்ளைகள்,
பாசமுள்ள அம்மா,
அன்பு அப்பா,
அருமைச் சகோதரங்கள்,
அன்பு மைத்துனர்கள்.
மூளாய்தெற்கு, சுளிபுரம்.
28-4-1986 [C-2040]

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொ. அரியசிங்கம்**
அன்னையின் மடியில்.
01-04-1952
அரக்கர் பிடியில்;
09-05-1985
திதி; 28-04-1986

வலம்புரி முத்தென வையகம்வந்தாய், வனப்புடைய வாழ்வு தாது தீப மானாய், கொடை சிறந்த வள்ளல் என்று குறிக்க வைத்தாய், கோமகனே! எம் வாழ்வு சிறக்க ன்றாய், மடைதிறந்த வெள்ளமென மகிழ்ச்சி ந்தாய், மா னே! பல்லாண்டு காலமெங்கள் இடையிருந்து வாழாமல் மறைந்தாய் அந்தோ! என் செய்வோம். பா ள ே; மறவோம், காலமெல்லம் உன் நினைவை சூழ்ோம். துயர் கடலில் ஆடுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
பாசமைந்தர்' அ நேசரெத்தினம், அ.சிவமணி.
பாசமகள்: அ. ல்பனா
அ. சி ஜனி மாமியார்,
பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்.
வீரபத்திரகோவிலடி,
ம லி ண் ,
வ வெட்டித் றை.
(C 2004)


# ...ாற்றாண்டுக்கும் ...க தொடர்ந்தும் ...ன்னணியில்!



இலங்கையில் பி.வி.சி. குழாய் உற்பத்தியை முதன்முதல் ஆரம்பித்ததே எஸ்-லோன். இப்போது கால் நூற்றாண்டும் கழிந்துவிட்டது. ஆனால் தொடர்ந்தும் முன்னிலையே வகிக்கிறது எஸ்-லோன். எஸ்-லோன் குழாய்கள், இணைப்புகள், பீலிகள் என்பன நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பிரபல்யம் பெற்றுவிட்டன.

ஆமாம்! நீர் விநியோகம் என்றதுமே இன்று நினைவுக்கு வருவது எஸ்-லோன் தானே. ஏன் தெரியுமா? இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் எஸ்-லோன் அதன் தரச் சிறப்பின் தனித்துவத்தைப் பேணிவந்துள்ளது.

உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான பரிசோதனையும் தரக்கட்டுப்பாடும் இதனை உறுதிப்படுத்துகின்றன. எஸ்-லோன் என்ற பெயர் தாங்கிய பி.வி.சி. குழாய் ஒவ்வொன்றிலும் இந்த உறுதிப்பாடு உண்டு.

ஆயுள் முழுவதும் தொல்லையில்லாத, தங்கு தடையற்ற நீர் விநியோகத்திற்கு, பொறியியலாளர்கள், கட்டிடக் கலைஞர்கள், குழாய் பொருத்துநர்கள், ஒப்பந்தகாரர்கள் அனைவரும் நம்பிப் பாவிப்பது எஸ்-லோன். முன்னோடி மட்டுமல்ல; முன்னேக்கிச் செல்வதும் எஸ்-லோன்.

S-lon





GARADS

மீட்டர் ரூபா 13.05 தொடக்கம்

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 93716-9.

## கண்நோய் பரவுகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது கண்நோய் பரவிவருகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்களிலும கண்நோய் ஏறபட்டுளளது. யாழ். ஆஸ்பத்திரி கண்சிகிச்சை நிலையத்தில் இந்நோயால பாதிககப்பட்டவர்கள, கடந்தசிலதினங்களாகச சிகிச்சை பெற்றனர் சிலர் தனியார் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்றனர்.

கண்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக சிகிச்சை பெறுவது நல்லதென ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [க]

## தனியார் பஸ்சேவை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திறகுமிடையில் மீண்டும் ஒரு தினங்களாக தனியார் ஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆருதினங்களுக்கு முன்தினமிர கொழும்பிலருந்து புறப்பட்ட பஸ்கள தனியார் நேற்று மாலை யாழ். நகர வந்தடைந்தன.

வழியில் பல இடங்களில், ஆயுதப்படையினரின்சோதனை அதிகரித்திருப்பதாகவும்,வேறு சிரமம் எதுவும் இலலை எனவும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார். (க)





**புதிய ஸ்நோபிளேக்ஸ் உங்கள் ஆடைகளுக்கு தூய்மையான, புதிய தோற்றத்தைத் தரும்...**




ரூ.17/= ரூ.9/=

சவர்க்காரத்தில் சாதாரணமாக 60% வீத கொழுப்புச்சத்து அல்லது அதற்குக் குறைந்த அளவே இருக்கும். ஆனல் புதிய ஸ்நோ பிளேக்ஸில் அடங்கியுள்ள பூரணமான கொழுப்புச்சத்து 60% வீதமாகும். இது விஞ்ஞான முறைப்படி சவர்க்காரத்தில் அடங்கியிருக்க வேண்டிய சரியான அளவாகும்.

இத்தனித்தன்மை காரண மாக புதிய ஸ்நோபிளேக்ஸ் உங்களுக்கு சில பிரமாதமான பயன்களைத் தருகிறது.

- இறுக்கித் தேய்க்க வேண் டிய அவசியமில்லை. அதன் மென்மையான செயற்பாட் டின காரணமாக அழுக்கு பூரணமாக அகற்றப்படுகிறது.
- புதிய ஸ்நோபிளேக்ஸில் கடுமையான இரசாயனப் பொருட்கள் இல்லாததால் மிருதுவான ஆடைகளுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுவதில்லை. ஆடைகளில் செறிந்து, மிக மென்மையாக அழுக்கை அகற்றி சுத்தப்படுத்துகின்றது. கழுவும் ஒவ்வொரு தடவையும் கவர்ச்சியான புதுத் தோற்றத்தைத் தருகின்றது.
- சருமத்தைப் பாதிப்பதில்லை. புதிய ஸ்நோபிளேக்ஸ் கொண்டு எத்தனைமுறை கழுவினுலும் உங்கள் கைகளுக்கு இதமான உணர்வளித்து, மென்மையாக, சௌம்யமாக வைக்கிறது.

இன்று முதல் புதிய ஸ்நோ பிளேக்ஸை பாவிக்கத் தொடங் குங்கள். அது சுத்தமாக, புதி தாக, பளபளப்பாக கழுவுவ துடன் மென்மையாகவும் செயற்படுகின்றது.

பிரிட்டிஷ் சிலோன் கோர்ப்பரேசன் லிமிடெட்

BCC **ஸ்நோபிளேக்ஸ்-உங்கள் ஆடைகள் விரும்புகின்றன. நீங்களும் விரும்புவீர்கள்**

TAL


## இன்றைய பலன்

மாதம்; சித்திரை
திகதி: 1 (1986 - 4 - 28)
கிழமை: திங்கள்
திதி: சதுர்த்தி காலை 9-23ன் மேல் பஞ்சமி
நக்ஷத்திரம்: கேட்டை காலை 6ன் மேல் மூலம்

மேடம்: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கும். கடமையில் ஆர்வம் பிறக்கும்.

இடபம்: மனதில் விரக்தி தென்படும். உடல் நலம் பாதிககப்படலாம். கால் நடைகளினுல் நஷ்டம் ஏற்படும்.

மிதுனம்: பணக்கோட்டை கட்டுவீர்கள் எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும்; சகோதரத்தின் உடல்நலமும் பாதிககபபடலாம்

கடக : மோதுமென்ற மனத்துடன் செயலாற்றுவீர்கள். களஸ்திரவழியால் பெருமைகள் வந்து சேரும் தொழில் துறையிலும் வெற்றி உண்டு.

சிங்கம்: உணர்ச்சிகரமான னம. பணபபோராட்டங்கள் அதிகரிக்கும். உடல் நலமும் பாதிக்சப்படலாம்

கன்னி; நல்லதைச் செய்வீர்கள் நலன் பெருகும். பிரமுகர்கள் உங்களை தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும்.

துலாம்: கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்

[8ம் பக்கம் பார்க்க]

## ஓராண்டு நிறைவஞ்சலி



அமரர்

**மு.துரைராசசிங்கம்**

அவர்கள்

ஆண்டவன் படைப்பு: 1950-09-13

அரக்கர் அழிப்பு: 1985-05-09

திதி: 28-04-1986

எங்கள் குடும்பத்தின் தீபமாய்த் திகழ்ந்து கண்ணின் இமைபோல் எமைக் காத்தருளிய அன்புத் தெய்வமே. எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவைத்து ஆள்ன பறித்தெடுத்தான் உங்கள் ஆருயிரை அன்று. உங்கள் அன்பு, பண்பு, பாசம் ஆகியன என்றும் எமதுளத்தில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்புமனைவி: புஷ்பவதி துரைராசசிங்கம்,
அன்புமகள்: சிவரஜனி துரைராசசிங்கம்.
அன்புமகள்: சிவரூஜ்னி துரைராசசிங்கம்.
நல்வேப்பங்கூடல்,
பட ... வீதி
பொலிகண்டி-சமரபாகு,
வல்வெட்டித்துறை.
(C 2003)

# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[யாழ் நகரில் O/L வகுப்புகளுக்கு தனித்துவம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்]

புதிய **O/L** பிரிவு 6

ஆரம்பம்: 30-4-1986

DAY CLASS [8-30 — 1-30]

EVENING CLASS 2-30 — 4-30

5-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம் வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

மு. குறிப்பு-

★ 9 வருடகாலமாக O/L வகுப்புக்கள் யாழ் நகரில் இவ் நிறுவனத்தில் மட்டும் சிறப்பாக நடைபெறுகின்றது

★ கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடத்தும் ஒரே நிறுவனம்.

★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

★ ஒவ்வொரு வகுப்பிலும் [50 மாணவர்களுக்குமேல் அனுமதிக்கப்படமாட்டாது.

[A 463]


## புதிய சந்தை

[இறுப்பிட்டி]

பொதுமக்களின் நன்மை கருதி புங்குடுதீவு பெருங்காடு கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையில் புதிய சந்தையொன்று திறக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை வட பிராந்திய சர்வோதய அமைப்பாளர் திரு. திருநாவுக்கரசு மேற்கொண்டிருந்தார்.

## மின் ஊழியர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அறியத்தருகின்றேன்.

''பொதுமக்களின் நலன்கருதியே மாநகராட்சிமன்ற ஊழியர்கள் கடமை செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் தாக்கப்படுதவற்கோ அவமானப்படுத்தப்படுவதற்கோ சேவையாற்றவில்லையென்பதையும், அவர்கள் சேவையாற்றுது போனால் பாதிக்கப்படுபவர்களும் பொதுமக்களே என்பதையும், ஆகவே அவர்களுக்கு ஒத்துழைப்பும் பாதுகாப்பும் வழங்கவேண்டும் என சமூகத்திலுள்ள எல்லாத் தரப்பினரையும் வேண்டிக்கொள்கின்றேன்.''

[க]

## விடுதலை செய்யப்பட்டார்

[நெடுந்தீவு]

விசுவமடுப்பகுதியில் தேடுதலின் போது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட ஒரேயொருஇளைஞர் ஐயாவு என்பவர் நீண்ட விசாரணையின்பின் கிளிநொச்சியில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

## கட்டடம் தரைமட்டம்

(நெடுந்தீவு)

அண்மையில் பாதுகாப்புப் படையினரால் விசுவமடுப் பகுதியில் தேடுதல் வேட்டையின்போது சுண்டிக்குளம்சந்தியில் தகர்க்கப்பட்ட கட்டடம் சுமார் மூன்றரை இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதில் அமைந்துள்ள ஐந்து கடைகளும் தரைமட்டமாக்கப்பட்டதுடன், திருத்துவதற்காக உள்ள உழவு இயந்திரம் ஒன்றும். பல மோட்டார் சைக்கிள்களும் சேதமாகியுள்ளன.

## முதலாமாண்டு நினைவஞ்சலி



சேதுலிங்கம் கலாமோகன் (கலா)

ஆண்டவன் படைப்பு: 08-03-1953

அரக்கர் அழிப்பு: 09-05-1985

திதி: 28-04-1986

அரக்கர்களினால் பலியெடுக்கப்பட்ட எமது அன்பு மகனே! நீ எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உமது அன்புப் பாதுகாப்பில் எங்களை அச்சமின்றி வாழவைத்த பண்புதனை மறக்கமுடியாது தவித்துக்கொண்டிருக்கிறோம். உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்குக!

ஐயா, அம்மா,
அக்கா, தம்பி சிவா,
மனைவி, மகள்,
மருமக்கள் உறவினர்கள்.
வடரவித்தி,
வல்வெட்டித்துறை.
(C 19 3)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

சி. சிவக்கொழுந்து

[சிவா பொடி வேக்ஸ் உரிமையாளர்]

மலர்வு: 30-08-1942

உதிர்வு: 09-05-1985

திதி: 28-04-1986

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! மரணம் தவிர்க்க முடியாதது என்பதனை மனம் புரிந்துகொள்கிறது. ஆனாலும், நீங்களில்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றன. உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிருள்ள வரை ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
பெற்றோர்,
சகோதரங்கள்.
புளுப்பொறுக்கி,
சரணவாய் தெற்கு.
கரவெட்டி. (C1967)


# லனேற்

**விளைச்சல் பெருகிட பூச்சிநாசினி**




லனேற் திரவமாகவும், நீரில் கரையக் கூடிய கரைசலாகவும் கிடைக்கிறது சோயா, போஞ்சி, மிளகாய், வெண்காயம், தக்காளி, கத்தரி, புகையிலை போன்ற சகல பயிர்களிலும் இலைகள், காய்களைத் தாக்கும் பூச்சிகளை அழித்து உங்கள் பயிர்களைப் பாதுகாத்து அமோகவிளைச்சல் தருகிறது லனேற் பூச்சிநாசினி, லனேற் ஓர் லங்கெம் தயாரிப்பு, இது தரமும் செயற்திறனும் மிக்கது.

ரூ. 37·50 முதல்.

லங்கெம்-விவசாயிகளின் தோழன்.
லங்கெம் சிலோன் லிமிட்டெட்,
760, 762, பேஸ்லைன் வீதி, கொழும்பு-9.
தொலைபேசி: 598292-6.

JWT LK 1801

LANKEM

ලංකෙම් லங்கெம்

**லங்கெம்-விவசாயிகளின் தோழன்.**

[A 404]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 28 4-86

# புளியம்பொக்கணையில் விமானக் குண்டு வீச்சு

[யாழ்ப்பாணம்]

புளியம்பொக்கணைப் பகுதியிலுள்ள பல வீடுகளின்மீது நேற்று ஆகாயத்திலிருந்து குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரியவந்துள்ளது.

பரந்தனிலிருந்து சமார் 7 மைல் தூரத்தில் புளியம்பொக்கணைக் கிராமம் உள்ளது.

சுமார் 9 குண்டுகள் வரை வீசப்பட்டதாகவும் இக் குண்டுத் தாக்குதலால் பல வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் இக்குண்டுவீச்சுத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## "30-ம் திகதிக்கு முன் காரணம் தெரிவிக்குக"

[யாழ்ப்பாணம்]

தனியார் மினிபஸ் சங்க அமைப்பாளரும், 771 சேவையின் தலைவருமான மதிமுகராசா சுடத்தப்பட்ட காரணத்தை இம்மாதம் 30-ம் திகதிக்குமுன் தெரிவிக்காவிடில் தனியார் போக்குவரத்து சேவையாளர் யாவரும் மே முதலாம் திகதிகூடி மேல் நடவடிக்கை பற்றி ஆராய்வர்.

வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்க ப-தலைவர் திரு ஐ காலிங்கநடனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் நால்வர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டின் கடுவாஞ்சேரிப் பகுதியில் இலங்கைத் தமிழர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது ரங்கன், குணரத்தினம், அருமைநாதன், ஆறுமுகம், ரகுநாதன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வசமிருந்து வானெலி ஒலிபரப்பு சாதனங்கள், நாட்டுக் குண்டுகள், மற்றும் ஆயுதங்கள் போன்றவை சுங்க அதிகாரிகளினல் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் ஒப்படைத்த இளைஞரின் சடலம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் இளைஞரின் சடலம் ஒன்று நேற்றுப் பொலிசாரினல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவமுகாமில் வைத்து இச்சடலம் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது. [மா]

### பேர்ணட்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் குழுவென்று நாளை கொழும்பு வருவது தெரிந்ததே.

இப்பேச்சுக்களுக்கான ஆரம்ப ஏற்பாடுகளைக் கவனிக்கவும், சில ஆலோசனைகளைப் பெறவுமே திரு திலகரத்தின இலங்கை அரசினல் அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. [ய-செ]

### இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உயரும். சிலர் புதிய வாகனத்தை காள்முத செய்தில் கவனம் செலுத்துவர்.

விருச்சிகம்: தூரத்துப்பயணம் துயரத்தை தரலாம். ... விவகாரத்தில் வீழ்ச்சி தென்படும் இனறு ... நறுவருந்தம் வரிலும் நன்கு ... னிக்கம் டல் வேண்டும்

தனுசு: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள்இடம்பெறும். களஸ்திர வழியால்பொருள்வரவுஉ ...

மகரம்: பாட்டி வவகாரங்களில் பணம் விரயமாகும் ஆணவப்போக்கினல் சந்தர்ப்பம் நழுவவிடப்படலாம்.

கும்பம்: அன்புக்கரங்கள் அணைக்கும் அதிர்ஷ் தேவையின் பார்வையும் படலாம் தக்க மயத்தில் நண்பர் ... நதையின் ஆதரவும் கிடைக்கலாம்.

மீனம்: வெற்றிப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மன மாற்றம் நன்மை தரும்,

திருமலை
வே. ரவீந்திரன்

### இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை அரசுக்கு இங்கிலாந்திலிருந்து ஆயுத விற்பனை தொடர்ந்து நடைபெறுகின்றது. இதனை அண்மையில் புதுடில்லிக்கு விஜயம்செய்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர். ஜெவ்ரி ஹோவ்விடம் நாம் எடுத்துக் கூறியிருந்தோம். ஆயினும் இந்த விற்பனைகள் தனிப்பட்ட வர்த்தக ரீதியில் நடைபெறுகின்றன வென்றும், அவற்றை பிரிட்டிஷ் அரசினல் கட்டுப்படுத்த முடியாதென்றும் அவர் கூறினர்'' என்று சொன்னர்

இலங்கையின் இனப்பிரச்னையைப்பற்றி மேலும் பிரஸ்தாபிக்கையில் அமைச்சர், இப்பிரச்னையை அணிசேரா இயக்கத்தின் முன் கொண்டுசென்று தீர்ப்பதற்கான திட்டமெதுவும் இந்திய அரசிடம் இல்லை எனக் குறிப்பிட்டார்.

உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துவதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என சுவிஸ் அரசு இந்திய அரசிடம் உறுதியளித்திருப்பதாகவும் அவர் கூறினர்.

### இடைத் தேர்தல்கள்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

சிபார்சு செய்ய வேண்டும். சிபார்சு செய்யாத பட்சத்தில் அத்தொகுதிக்கான இடைத் தேர்தலை நடத்தமுடியும்.

இவ்வாறு கடந்த காலங்களில் காலியான சில தொகுதிகளுக்கு அங்கத்தவர்கள் சிபார்சுசெய்யப்பட்டனர். சில தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் நடைபெற்று அங்கத்தவர்கள் தெரிவாகினர்.

இந்நிலையில் ஐ. தே. க அரசாங்கம் எடுத்துள்ள இம்முடிவு அரசியல் வட்டாரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏன் இம்முடிவு எடுக்கப்பட்டதெனத் திட்டவட்டமாகத் தெரியவில்லையாயினும் நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டே இம்முடிவு எடுக்கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

அண்மையில் அச்மீமனத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஐ தே க. சுதந்திரக் கட்சியிடம் தோல்வியுற்றது குறிப்பிடத்தக்கது.

### வல்வையில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாய்ச்சப்பட்டது. ஏதாவது படகு அல்லது வள்ளம் எரிக்கப்பட்டிருக்கலாம் எனப் பேசப்படுகிறது.

கடந்த இரண்டு நாட்களாக இப்பகுதி மீனவரொருவரையும் அவரது வள்ளத்தையும் காணவில்லையெனத் தேடுதல் நடைபெறுகிறது

### வல்வைக்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டதுடன் அவர்கள் பயணம்செய்த படகும் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது

அத்துடன் வல்வெட்டித்துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியத்தில் பொலித்தீனினல் சுற்றப்பட்ட பொதிகள் மிதந்ததாகவும், மிதந்த ஒரு பொதியில் ஆர். பி. ஜி ரக ரைபிள்கள் மூன்றும் இரண்டு இயந்திரத் துப்பாக்கிகளும் இருக்கக் காணப்பட்டதாகவும், இப்பொதியில் வட பகுதியைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், பெரும்பாலும் இவை சேதப்படுத்தப்பட்ட வள்ளத்திலிருந்தே வந்தவையாக இருக்கலாம் என்றும் அரச வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

### எழுத்துமூலம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றது.

கடந்த தடவைகள் போல் அன்றி இம்முறை இந்தியக் குழுவினர் இலங்கை அரசாங்கத்திடமிருந்து முடியுமானல் எழுத்து மூலமான சில உறுதிமொழிகளைப் பெற முயற்சிப்பார்கள் என்று நம்பப்படுகின்றது.

கடந்தவாரம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டபொழுது பிரதம மந்திரி ராஜீவ் காந்தி தமது ஆலோசகர்கள் எவரையும் தம்முடன் வைத்துக்கொள்ளாமலே பேச்சுநடத்தியதாகக் கூறப்படுகின்றது. இதனல் த வி. கூ தலைவர்கள் தமது நிலைமையை மனம்விட்டுப் பிரதமருடன் வெளிப்படுத்தியிருக்கலாமென்றும் இந்திய அதிகாரிகள் பற்றித் தமது அங்கலாய்ப்புக்களையும் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

## யாழ். நகரில் நடந்த இரு கொள்ளைகள்

[யாழ்ப்பாணம்]

வீட்டுவேலைக்காரரையும் பொறியியலாளரையும் துப்பாக்கிமுனையில் பணயம் வைத்து ஒருலட்சம் ரூபா பெறுமதியான ரி. வி. டெக் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 10-30 மணியளவில் இக்கொள்ளை யாழ் நாவலர் வீதியிலுள்ள பொறியியலாளர் க. சுப்பிரமணியம் என்பவரது வீட்டில் நடந்துள்ளது.

விலை உயர்ந்த ரி வி. டெக். வீடியோ உட்படப்பல பொருள்களை ஆயுததாரிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர் வீட்டின்முன் பக்கக் கதவைத் திறக்கச்செய்து கொள்ளையடித்த பொருள்களை வாகனத்தில்ஏற்றிச்சென்றனராம்

இப் பொறியியலாளரின் கார் முன்பு இனந்தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டு இதுவரை திருப்பிக் கொடுக்கப்படவில்லையாம்.

### பகற்கொள்ளை

பிறவுண் வீதியில் உள்ள சிதம்பரநாதன் என்பவர் வீட்டிலும் கொள்ளை நடந்துள்ளது.

சமையலறை புகைக்கூட்டைப் பிரித்து உள்ளேசென்ற கள்வர் இங்கு 25 ஆயிரம்ரூபா பணத்தையும், 10 பவுண் நகைகளையும் பட்டப்பகலில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வீட்டுக்காரர்கள் புங்குடுதீவிலுள்ள கோவில் ஒன்றுக்குச் சென்றிருந்த சமயமே இக்கொள்ளை நடந்ததாம்.

இதே வீதியில் அண்மையில் டாக்டர் செல்வரத்தினத்தின் வீட்டிலும் கொள்ளை நடந்தது குறிப்பிடத்தக்கது. [ஐ]

## ஒட்டுசுட்டான் முகாம் அருகில் கடை கொள்ளை

[ஒட்டுசுட்டான்]

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமிற்கு அருகாமையிலுள்ள கதிர்ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்திலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் போராளிகளுக்கும் இராணுவத்தினருக்கும் நேரடி மோதல் ஏற்பட்டதால் இராணுவ முகாமிற்கு அருகாமையில் உள்ள கடைகளனைத்தும் மூடப்பட்டம், இப்பகுதியில் பொது மக்கள் போக்குவரத்து மிகக் குறைந்து காணப்பட்டதும் தெரிந்ததே.

## 10-வது திருத்தம்

[கொழும்பு]

இலங்கையின் அரசியல் யாப்பில் பத்தாவது திருத்தமும் கொண்டுவரப்பட்டுள்ளதாம். அதனைத் தொடர்ந்து தேர்தல்கள் சட்டவிதிகளிலும திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

ஆள் மாருட்டம், மோசடிகள் என்பவற்றைத் தடுக்க இரு திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

வாக்குரிமை, தேர்தல்கள் மீதான பாராளுமன்றத் தெரிவுக்குழு. தனது இரண்டாவது இடைக்கால ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தல் சமர்ப்பித்துள்ளது பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸா இக்குழுவுக்கு தலைமை தாஙகுகிறர். [ய-செ]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு சித்திரை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu, Telephone 22389, 24126.

## மரண அறிவித்தல்

### வண. சலோமைத் தாயார்

வண. சலோமைத் தாயார் அவர்கள் தமது சொந்தநாடாகிய பெல்ஜியத்தில் இறைபதம் அடைந்து விட்டார்கள். இவர்கள் இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில், பல்லாண்டு காலம் பணி புரிந்து தம்மையே நமது மக்களுக்காக அர்ப்பணித்தவர்கள். இவர்களின் மரணச் செய்தியை சகல துறவற சபையினருக்கும், பழைய மாணவர்கள, நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம். (C- 2041)

### ஆசீர்வாதம் விஜயகுமார்

லங்கா சிமெந்து லிமிட்டெற்றில் பாதுகாவலராக பணிபுரியும் விஜயகுமார் அகால மரணமானர். இவர் இளவாலை ஆசீர்வாதம் செல்லம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், வவனியா விவசாயக்கந்தோரில் பணிபுரியும் தம்பு, சந்திரா, சாந்தகுமாரி, பாலச்சந்திரன் [ஜேர்மனி], பிரதீப்குமார், சந்திரசேன ஆகியோரின் சகோதரனும், வலன்ரைன், அமிர்தரஞ்சன் [லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்] ஆகியோரின் மைத்துனரும், டல்றீன், றஞ்சித், ரேகா, பபிசங்கர், நிலோஜா ஆகியோரின் மாமனுமாவார். இவரின் ஈமக்கிரியைகள் [28-4-86] இன்று மாலை 2 மணிக்கு இளவாலையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

க. அமிர்தரஞ்சன் குடும்பத்தினர்.

[C2042]

எமது இன்றைய வெளியீடுகள்

1. பொய் முகங்கள் V. G. P. (ராகேஷ், சுலக்சன)
2. தர்மகர்த்தா (புதுமுகம் ராஜா, சோபா)
3. பணத்தோட்டம் (M. G. R., சரோஜாதேவி)
4. அனுபவி ராஜா அனுபவி (நாகேஷ், ராஜஸ்ரீ)
5. குமரிப் பெண் V. G. P. (ரவிச்சந்திரன், ஜெயலலிதா, நாகேஷ்)
6. எங்கிருந்தாலும் வாழ்க (ரகுவரன், அர்ச்சன)

இன்னும் சில ஆங்கில வெளியீடுகளும்.

வீடியோ பிரசாத்,
232, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A-464]